# திருமங்கையாழ்வார் அருளிச் செய்த
# பெரிய திருமொழி
# எட்டாம் பத்து

## ஐந்தாம் திருமொழி - தந்தைகாலில்
## திருக்கண்ணபுரம் 5
## [தலைவனைப் பிரிந்த தலைவி அந்திப்பொழுதில் தலைவன் வாராது தாழ்த்த, தென்றல் முதலியவற்றால் வருந்திக் கூறுதல்]

** தந்தை காலில் விலங்கற * வந்து
தோன்றிய தோன்றல் பின் * தமியேன் தன்
சிந்தை போயிற்றுத் * திருவருள்
அவனிடைப் பெறும் அளவு இருந்தேனை **
அந்தி காவலன் அமுதுறு
பசுங்கதிர் * அவை சுட அதனோடும் *
மந்த மாருதம் வனமுலை
தடவந்து * வலி செய்வது ஒழியாதே 1

மாரி மாக்கடல் வளை வணற்கு இளையவன் *
வரை புரை திருமார்பில் *
தாரின் ஆசையில் போயின நெஞ்சமும் *
தாழ்ந்ததோர் துணை காணேன் **
ஊரும் துஞ்சிற்று உலகமும் துயின்றது *
ஒளியவன் விசும்பு இயங்கும் *
தேரும் போயிற்றுத் திசைகளும்
மறைந்தன * செய்வது ஒன்று அறியேனே 2

ஆயன் மாயமே அன்றி மற்று என்
கையில் * வளைகளும் இறை நில்லா *
பேயின் ஆருயிர் உண்டிடும்
பிள்ளை * நம் பெண் உயிர்க்கு இரங்குமோ? **
தூய மாமதிக் கதிர் சுடத்
துணை இல்லை * இணைமுலை வேகின்றதால் *
ஆயன் வேயினுக்கு அழிகின்றது
உள்ளமும் * அஞ்சேல் என்பார் இலையே 3

கயங்கொள் புண் தலைக் களிறுந்து
வெந்திறல் * கழல் மன்னர் பெரும் போரில் *
மயங்க வெண்சங்கம் வாய் வைத்த
மைந்தனும் * வந்திலன் மறிகடல் நீர் **
தயங்கு வெண்திரைத் திவலை நுண்பனி
எனும் * தழல் முகந்து இளமுலை மேல் *
இயங்கு மாருதம் விலங்கில் என்
ஆவியை * எனக்கெனப் பெறலாமே 4

ஏழு மாமரம் துளை படச்
சிலை வளைத்து * இலங்கையை மலங்குவித்த
ஆழியான் * நமக்கு அருளிய
அருளொடும் * பகல் எல்லை கழிகின்றதால் **
தோழி! நாம் இதற்கென் செய்தும்?
துணை இல்லை * சுடர் படு முது நீரில் *
ஆழ ஆழ்கின்ற ஆவியை அடுவதோர் *
அந்தி வந்து அடைகின்றதே 5

முரியும் வெண்திரை முதுகயம்
தீப்பட * முழங்கு அழல் எரி அம்பின் *
வரிகொள் வெஞ்சிலை வளைவித்த
மைந்தனும் * வந்திலன் என் செய்கேன்? **
எரியும் வெங்கதிர் துயின்றது *
பாவியேன் இணை நெடுங்கண் துயிலா *
கரிய நாழிகை ஊழியின்
பெரியன * கழியுமாறு அறியேனே 6

கலங்க மாக்கடல் கடைந்தடைத்து *
இலங்கையர் கோனது வரை ஆகம்
மலங்க * வெஞ்சமத்து அடுசரம்
துரந்த * எம் அடிகளும் வாரானால் **
இலங்கு வெங்கதிர் இளமதி
அதனொடும் * விடை மணி அடும் * ஆயன்
விலங்கல் வேயினது ஓசையுமாய் *
இனி விளைவது ஒன்று அறியேனே 7

முழுது இவ்வையகம் முறை கெட
மறைதலும் * முனிவனும் முனிவெய்தி *
மழுவினால் மன்னர் ஆருயிர்
வவ்விய * மைந்தனும் வாரானால் **
ஒழுகு நுண்பனிக்கு ஒடுங்கிய
பேடையை * அடங்க அஞ்சிறை கோலி *
தழுவு நள்ளிருள் தனிமையின்
கடியதோர் * கொடுவினை அறியேனே 8

கனஞ்செய் மாமதிள் கணபுரத்தவனொடும் *
கனவினில் அவன் தந்த *
மனஞ்செய் இன்பம் வந்து உள்புக
வெள்கி * என் வளை நெக இருந்தேனை **
சினஞ்செய் மால்விடைச் சிறு மணி
ஓசை * என் சிந்தையைச் சிந்துவிக்கும் *
அனந்தல் அன்றிலின் அரி குரல் *
பாவியேன் ஆவியை அடுகின்றதே 9

** வார்கொள் மென்முலை மடந்தையர் *
தடங்கடல் வண்ணனைத் தாள் நயந்து *
ஆர்வத்தால் அவர் புலம்பிய
புலம்பலை * அறிந்து முன் உரை செய்த **
கார்கொள் பைம்பொழில் மங்கையர்
காவலன் * கலிகன்றி ஒலி வல்லார் *
ஏர் கொள் வைகுந்த மாநகர்
புக்கு * இமையவரொடும் கூடுவரே 10

**அடிவரவு:** தந்தை மாரி ஆயன் கயம் ஏழு முரியும் கலங்க முழுது கனஞ்செய் வார்கொள் தொண்டீர்

**திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம்**

---